# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2010.06.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

***மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகத்தைக் (கொழும்புக் கிளை) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்***

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பதிரண அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை :*** *ரூபா 8.00* ***தபாற் செலவு :*** *ரூபா 5.00*

## மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்)

## மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு கழகம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி அத்துடன் அதன் குறிக்கோள்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாக அமைக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) கூட்டிணைத்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் கொழும்புக் கிளையைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகத்தின் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு

செய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இராகுல கல்லூரியின் பழைய மாணவர்களினதும், தற்போதைய மாணவர்களினதும், தற்போதைய ஆசிரியர்களினதும், முன்னைய ஆசியர்களினதும், கல்வி கலாசார மற்றும் சமூகப்பணிகளை மேம்படுத்துதல் ;

(ஆ) இராகுல கல்லூரியின் மாணவர்களினதும், றுகுண மக்களின் நன்மைக்காகவும், இயற்கை வளங்களை பாதுகாப்பதும், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதும் அத்துடன் அத்தகைய வளங்களை அபிவிருத்தி செய்தலும் அவற்றைப் பேணிப்பாதுகாத்தலும் ;

(இ) மாணவர்களுக்கிடையேயும் ஆசிரியர்களுக்கிடையேயும் சுமுகமான உறவுகளை மேம்படுத்துவதற்காக அத்தகைய பிரிவினருக்கிடையே நலனோம்புகைப் பணிகளையும் கலாசார சமூகப்பணிகளையும் அபிவிருத்தி செய்தல்;

(ஈ) புலமைப் பரிசில்களையும் அத்துடன் மற்றைய நன்கொடைகளையும் அளிப்பதற்காக இராகுல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் ஒன்றை ஸ்தாபித்தல் ;

(உ) நூலகங்கள், ஆராய்ச்சிகள் அத்துடன் பயிற்சி நிலையங்கள் என்பவற்றை ஸ்தாபித்தலும் அவற்றை பராமரித்தலும் ;

(ஊ) மாணவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை நடாத்தும் நோக்கத்திற்காக வெளிநாட்டு அத்துடன் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சுமுகமாக உறவுகளைப் பேணுதல் ;

(எ) கழகத்தின் பணிகளை எடுத்துச் செல்வதற்குத் தேவை யான வருமானத்தை உருவாக்குவதற்குத் தேவையான கருத்திட்டங்களைத் தொடங்குதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத் தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களை யும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற் கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக்கணக்குகளைத் தொடங்க வும், கொண்டுநடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்பு டன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களை கடனெடுக்க வும் அல்லது திரட்டவும், சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்து தல், வேலை நீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப் பட்ட நிறைவேற்றுக் குழுவொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்க நிருவகிக்கப் படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவானது இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று நிலையத்தில் பதவி வகித்த நிருவாகசபை உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்க லாம்.

**6**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பன மூலமாகவோ அல்லது வேறு வகையாகவோ அதற்குரித் தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்ப

துடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்கமாகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் ;

(ஆ) சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(இ) நிறைவேற்றுக் குழுவின் கூட்டங்களை கூட்டுவதற்கான நடப்புகளை அவதானித்தலும் அவற்றைக் கூட்டுதலும் வெற்றிடங்களை நிரப்புதலும், நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தலும், கூட்டங்களுக்கான நடப்பெண்ணைத் தீர்மானித்தலும் மற்றும் ஏனைய விடயங்களைக் கொண்டுநடாத்துதலும் ;

(ஈ) சபையிலான அத்துடன் கூட்டுத்தாபனத்திலான உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகுதியீனங்களும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவாகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும், அத்துடன் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதவையாகவிராத அளவுக்கு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ள மன்றத்தின் விதிகள், கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதே போன்ற ஒரு கூட்டத்திலும் அதே முறையிலும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப் போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, விருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக, இதுகாலவரை பெறப்பட்ட அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கின்றவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், பணிகளை நிறைவேற்றுகையிலும் அதனால் ஏற்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றதான அத்தகைய தொகைகளும் நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) எவ்வாறேனும் பெறப்பட்டதான கூட்டுத்தாபனத்தின் பணமும் ஆதனமும் இதன்கண் எடுத்துக் கூறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துமுகமாக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.*

**9**. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாக அமைதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவில் பெறப் பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றித் தகுந்த கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண் டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்கானது தகுதிவாய்ந்த ஒரு கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இந்தப் பிரிவில் "தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்" என்பது -

(i) பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்த வர் ஒருவராக அல்லது சட்டத்தால் தாபிக்கப் பட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்தின் பேரவையி னால் கணக்காளர் ஒருவராக தொழிற்படுவ தற்கு வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவர் ஒருவராக இருத்தல் வேண்டும்;

(ii) கணக்காளர் குழுமமொன்று அதன் ஒவ்வொரு வதிவிடப் பங்காளர்கள் அனைவரும் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் அங்கத்தவ ரொருவராக இருப்பதுடன் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழிற்படுவதற்கு வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத் தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய எண் ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையில் அன்றி எத்தன் மைத்தான சாசனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்ததைக்கு அடையாளமாக சாசனத்தில் தங்கள் பெயரை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒப்பம் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடு வதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று அமைப்புக்குள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று அமைப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*அமைப்பினால் செலுத்தப்படற்பாலனவும் அமைப்புக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

**12.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்புக்களை வரையறுத்தல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிட்டவர்களுக்கு, அவர்கள் மூலம் அவர்களிடமிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசின் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தின் கீழ் புரியப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் ஆளொருவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல் அல்லது செய்ய எத்தனிக்கப்பட்ட செயல் எதுவும் ஏதேனும் துடர்ச்சி அல்லது வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படலாகாது.

*நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான விடுபாட்டு உரிமை.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்